**Source:** *Tamil Murasu*, p2
**Date:** 14 May 2017

# ஹலிமா: வெளிப்படையான பகிர்வை ஊக்குவிக்கும் ‘ஷரியா’ சட்ட கருத்தரங்கு

ஒருவர் மற்றொருவரின் கலாசார வழிமுறைகளைப் பற்றி கற்றுக் கொள்வது முக்கியமான ஒரு தொடர் நடவடிக்கை என்றும் நேற்று நடத்தப்பட்ட முதல் ‘ஷரியா’ இஸ்லாமிய சட்டக் கருத்தரங்கு வெளிப்படையான கருத்துப் பகிர்வை ஊக்குவிப்பதில் முக்கியப் பங்கு வகிக்கிறது என்றும் கூறினார் நாடாளுமன்ற நாயகர் ஹலிமா யாக்கோப்.

சிங்கப்பூர் தேசிய பல்கலைக் கழக வளாகத்தில் கிட்டத்தட்ட 170 பங்கேற்பாளர்கள் கலந்து கொண்ட ஷரியா சட்டக் கருத்தரங்கில் பேசிய திருவாட்டி ஹலிமா, மலாய்க்காரர்கள், முஸ்லிம்கள் ஆகியோரின் உரிமைகளைக் கவனித்துக்கொள்ளும் அதே வேளையில் அனைத்து சிறுபான்மையினரின் உரிமைகளும் கட்டிக்காக்கப்படுவதை உறுதி செய்ய நமது நாடு சில செயல்முறைகளை உருவாக்கியதன் மூலம் வித்தியாசமான ஓர் அணுகுமுறையைக் கையாள்கிறது என்றும் அவர் குறிப்பிட்டார்.

“இதன் மூலம் நாட்டின் ஆளுமைக்கு அடிப்படையாக இருக்கும் தகுதிக்கு முன்னுரிமை எனும் செயல்முறைக்கு எந்த சீர்குலைவும் ஏற்படுவதைச் சிங்கப்பூர் தடுக்கிறது,” என்றார் திருவாட்டி ஹலிமா.



முஸ்லிம்களுக்கான ஷரியா சட்டம் குறித்த கையேடு ஒன்றை திருவாட்டி ஹலிமா யாக்கோப்பிற்கு வழங்கும் தேசியப் பல்கலைக்கழக சட்டத் துறை மாணவர்கள் திரு பிரபு தேவராஜ் (வலது), குமாரி ஷீஃபா சஃபி ஷிர்பீனி. **படம்: பெரித்தா ஹரியான்**

சிறுபான்மையினரின் உரிமைகளுக்கான அதிபர் மன்றம், சிங்கப்பூர் இஸ்லாமிய சமய மன்றம், முஸ்லிம் திருமணங்கள் பதிவகம் மற்றும் ஷரியா நீதிமன்றம் ஆகியவை இந்த செயல்முறைகள் என்றும் அவர் விவரித்தார்.

ஷரியா சட்டக் கருத்தரங்கு போன்ற நிகழ்வுகள் சிங்கப்பூருக்கு அடிப்படையாகவும் அதனை வழி நடத்தும் சித்தாந்தங்களாகவும் திகழும் செயல்முறைகளைப் பற்றி வெளிப்படையான கருத்துகளைப் பகிர்ந்துகொள்ள ஒரு தளத்தை அமைத்துக் கொடுக்கிறது என்று குறிப்பிட்ட திருவாட்டி ஹலிமா அந்த பகிர்வு இன, சமயக் கூறுகளுக்கு உட்பட்டும் அமைகின்றன என்றார்.

“நாம் நிலையற்ற கணிக்க முடியாத காலகட்டத்தில் வாழ்கிறோம். தனிமனிதரால் உருவாகும் செய்திகளும் தகவல்களும் மிக விரைவாகப் பரவுகின்றன. இதனால் தவறான கருத்துகளும் புரிதல்களும் விரைவாக உருவாகி அதே வேகத்தில் பூசல்கள் உருவாகின்றன,” என்று அவர் சுட்டினார்.

சிங்கப்பூரில் முஸ்லிம் சட்டத்தைக் கையாள்வது எனப்படும் தலைப்பில் (‘நேவிகேட்டிங் முஸ்லிம் லா இன் சிங்கப்பூர்’) ஆங்கில புத்தகம் ஒன்று நேற்று கருத்தரங்கில் வெளியிடப்பட்டது.

இந்தப் புத்தகத்தைச் சிங்கப்பூர் தேசியப் பல்கலைக்கழகத்தில் பயிலும் 16 மாணவர்கள் இணைந்து எழுதியுள்ளனர். அந்த 16 மாணவர்களில் 14 பேர் முஸ்லிம் அல்லாதவர்கள் என்பது குறிப்பிடத் தக்கது.

இதில் மொத்தம் 500 புத்தக பிரதிகள் வெளியிடப்படும். அவற்றை பள்ளிவாசல்களிலும் சமூக சேவை நிலையங்களிலும் இலவசமாக பெற்றுக்கொள்ளலாம்.

Source: Tamil Murasu © Singapore Press Holdings Ltd. Permission required for reproduction.